# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

### அ.சா. 8 (LW 5)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.பாலன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | சண்முகம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது வள்ளுவர் நகரில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த பன்னீர் செல்வம் எனது மாமா ஆவார். புகார்தாரர் ரமேசை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 06.05.2021 அன்று எனது பெரியம்மா எனது ஊரில் இறந்து விட்டார். இறப்பு நிகழ்ச்சிக்கு எனது உறவினர்களான மாமா பன்னீர்செல்வம்,ரமேஷ் மற்றும் பலர் வந்தனர். நான் பன்னீர்செல்வம், ரமேஷ், தங்கராஜ் மற்றும் சிலர் சாப்பிடுவதற்காக புங்கம்பாடி பிரிவுக்கு SRK ஓட்டலுக்கு சென்றோம். அப்போது ஓட்டல் இருந்தது. அங்கு சாப்பாடு இருந்தது. நானும் தங்கராஜும் ஓட்டலில் அமர்ந்து சாப்பிட்டோம். அப்போது ஓட்டலுக்கு வெளியே கலவரமாக இருந்தது. நான் அப்போது வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி கார்த்தி என்பவர் அந்த கடைக்காரரிடம் கடையை சாத்துங்கள் ஏன் திறந்து வைத்திருக்கிறீர்கள் என சத்தம்போட்டார். கடைக்காரர் சத்தம் போடாதீர்கள் நான் கடையை சாத்திக் கொள்கிறேன் என சொன்னார். அப்போது அந்த கடையில் 3 பெண்கள் இருந்தார்கள்,. அதில் ஒருவர் சிறுமியாக இருந்தார். அப்போது பன்னீர் செல்வம் சண்டை போடுபவர்களிடம் ஏன் சண்டை போடுகிறீர்கன் என கேட்டார். சாப்பாடு வாங்கி செல்வதாக பன்னீர் செல்வம் கூறினார். அப்போது கார்த்தி இது உள்ளூர் பிரச்சனை இதில் நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள் என்று சொல்லி கார்த்தி என்பவர் பன்னீர்செல்வத்தின் கழுத்தை பிடித்து தள்ளி கீழே தள்ளி விட்டார். பின்பு நாங்கள் போய் பார்த்த போது பன்னீர்செல்வம் மயக்க நிலையாக இருந்தார். பாலச்சந்திரன், தங்கராஜ், மற்றும் சிலர் வாகனத்தில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை

1,2 **<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி கார்த்தி பன்னீர்செல்வத்தின் கழுத்தை பிடித்து கீழே தள்ளிவிட்டதில் பன்னீர்செல்வம் கீழே விழுந்ததார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. பன்னீர்செல்வத்தை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது பாலச்சந்தர் என்பவர் உடன் சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நாளன்று ஓட்டலுக்கு நான், தங்கராஜ், ரமேஷ், பன்னீர்செல்வம் , பாலச்சந்தர், பாலசுப்பிரமணி, ஆகியோர்கள் சென்றோம். சம்பவம் நடந்த போது நாங்கள் அனைவரும் ஓட்டலில்தான் இருந்தோம். எதற்காக எதிரிகளும் ரமேஷ், பன்னீர்செல்வம் ஒருவருக்கொருவர் தள்ளுமுள்ளு செய்து சண்டையிட்டனர் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு சொந்த ஊர் நத்தம் தாலுகா மீனாட்சிபுரம் இல்லை. போலிசார் விசாரணையில் மேற்படி விலாசம் அளிக்கப்பட்ட பாலன் வேறுநபராக இருக்கலாம். என் அப்பா பெயர் சண்முகம் ஆகும். போலிசார் விசாரணையில் ராமையா மகன் பாலன் என கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் ஆள்மாறாட்டம் செய்து சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி பட்டியலில் உள்ள பாலன் நான் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை 2 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். அடையாளம் தெரியாது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு தெரியும் என சொல்கிறார். சாட்சி பட்டியலில் உள்ள ராமையா மகன் பாலன் அங்கு வந்த 2 நபர்கள் என்று தான் போலிசார்விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பின்னால் பெயர் கேட்டுத் தெரிந்த துரைராஜ் என்று இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள மீனாட்சிபுரத்தை சேர்ந்த பாலன் நான் கிடையாது என்றால் சரிதான். நான் ஆள்மாறாட்டம் செய்து சாட்சி சொல்வது தண்டணைக்குரியது என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்தேன். நான் சம்பவத்தை பார்த்ததாக சொல்வது பொய் என்றாலும் நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சி ஆதார் கார்டை நீதிமன்றத்தில் காட்டினார். அதில் எனது பெயர் பாலசுப்பிரமணியன் என்றும், நாகையகோட்டை பஞ்சாயத்து, வள்ளுவர் நகர் என்றும். த/பெ. சண்முகம் என்றும், பிறந்த தேதி 16.07.1979 என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது எனக்கு 46 வயது ஆகிறது. சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பாலன் என்பவருக்கு சம்பவ தேதியில் 53 வயது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.. சாட்டி பட்டியலில் கண்டுள்ள பாலனுக்கு தற்போது 58 வயது இருக்கும் என்றாலும் அது பற்றி எனக்கு

**தெரியாது. என் ஆதார் கார்டின் படி என் பெயர் பாலசுப்பிரமணி சண்முகம் என கண்டுள்ளது என்றாலும் பாலன் என காணப்படவில்லை என்றால் சரிதான். ஆதார் கார்டின் நகல் எ.த.சாஆ.1. ஆகும்.**

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:15:27 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.